பக்கங்கள்:-20+08

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

**யாழ். ஆறுகால்மடம் பகுதியில்**

## கடன் பிரச்சினையால் உயிரைமாய்த்த பெண்

யாழ்ப்பாணத்தில் வட்டிக்குக் கடன் பெற்ற இளம் குடும்பப் பெண்ணொருவர் கடனை மீளச் செலுத்த முடியாத நிலையில் உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 16 | சனிக்கிழமை | 31.08.2024 | அதிர்வு 029

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# சிறுபிள்ளைத்தனமானவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டாம்!

## மக்களிடம் ரணில் கோரிக்கை

சிறுபிள்ளைத்தனமானவர்களிடம் நாட்டை ஒப்படைத்து மக்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கிக் கொள்ளக்கூடாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனும், கடன் வழங்கிய 18 நாடுகளுடனும் செய்து கொண்ட ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் பாதுகாத்து எதிர்வரும் இரண்டு வருடங்களில் வரிகளைக் குறைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

06

# ரணிலுக்கு ரிஷாத் ஆதரவா?

## வவுனியாவில் பிரச்சாரக் கூட்ட மேடையை இன்று நேரில் பார்வையிட்டுள்ளதால் எழுந்துள்ள சர்ச்சை



(வவுனியா நிருபர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தரவா? என்று சர்ச்சை எழுந்துள்ளது.

வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரச்சாரக் கூட்ட மேடையை நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் இன்று பார்வையிட்டுள்ளார். இதன் காரணமாகவே இந்தச் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவுக்கு நாளை வருகை தரும் ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க வைரவப்புளியங்குளம், யங்ஸ்ரார் மைதானத்தில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்

06




# நல்லூர் கந்தனை வழிபட்ட சஜித்

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிமித்தம் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும், ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குமாக வேண்டியும் ஆசி பெறும் பொருட்டு இன்று காலை யாழ். நல்லூர் கந்தசுவாமி

கோயிலுக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.









# ரணிலின் தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று திறப்பு

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் “இயலும் ஸ்ரீலங்கா” யாழ்ப்பாணம் மாவட்ட தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் இன்று முற்பகல் 11 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)







# யாழ். மறைமாவட்ட ஆயரைச் சந்தித்த சஜித்

வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும், ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குமாக வேண்டியும் எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ இன்று யாழ்ப்பாணத்தில் யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிர காசம் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண் டார்.









# யாழ். நாகதீப விகாரையில் வழிபட்ட சஜித்

வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும், ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குமாக வேண்டியும் எதிர்க்கட்சித் தலை வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ இன்று யாழ். நாகதீப ரஜ மகா விகாரைக்கு விஜயம் செய்து மத வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றுக்கொண்டார்.









## சிறுபிள்ளைத்தனமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், ஏற்றுமதித் துறைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் டொலரின் பெறுமதியை 275 ரூபா வரை கொண்டுவர முடியும் என்றும், ஏற்றுமதித் துறையினருடன் பேச்சு நடத்தி, கிரமமாக இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

சஜித்தும் அநுரவும் இன்று மக்களுக்குப் போலியான அரசியல் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர் என்றும், பிள்ளைகளினதும் தங்களதும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஜா – எல நகரில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

## கடன் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த சயந்தன் கேதீசா என்ற 28 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் மீற்றர் வட்டிக்குக் கடன் பெற்று கடை ஆரம்பித்துள்ள நிலையில் வியாபாரம் இல்லாததால் கடையை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது வாங்கிய கடனை அடைக்க முடியாமையால், கடன் வழங்குநர்களால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலுக்க ரிஷாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துகொள்கின்றார்.

அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், குறித்த ஏற்பாடுகள் இடம்பெறும் இடத்துக்கு இன்று சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் அவற்றைப் பார்வையிட்டிருந்ததுடன், அங்கு நின்ற சிலருடன் உரையாடியும் இருந்தார்.

ஏற்கனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு என்று ரிஷாத் பதியுதீன் அறிவித்த நிலையில் குறித்த இடத்துக்குச் சென்று ரணில் விக்கிரமசிங்கவின் பிரச்சாரக் கூட்ட ஏற்பாடுகளைப் பார்வையிட்டமை அவரது ஆதரவு யாருக்கு என்ற சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## திருந்தாது சிங்களம்

இலங்கையில் இனப் போர் முடிந்து ஒன்றரை தசாப்தம் - 15 ஆண்டு காலம் - கடந்து விட்டது. ஆனால் யுத்தத்தின் போது வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் தமிழர்களின் கதி என்னவாயிற்று என்பது இன்னும் தெளிவாகவில்லை. உண்மை வெளிப்படுத்தப்படவில்லை.

அது தொடர்பில் நம்பிக்கை தரும் - நீதி, நியாயமான - முயற்சிகள் முன்னெடுக்கப்படவே இல்லை.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம் யுத்தம் முடிந்த பின்னர், 17 தடவைகள் வந்து போயிற்று. அந்த வரிசையில் நேற்றும் ஒரு தினம் கடந்தது.

வலிந்து காணாமலாக்கப்பட்ட தங்களின் இரத்த உறவுகளைத் தேடி இந்த சர்வதேச தினங்களில் மட்டுமல்லாமல், தினசரி போராடிக் கொண்டிருக்கின்றனர் அவர்களின் உறவுகள்.

அந்தப் போராட்டங்களுக்கு நீதி கிடைப்பதாக இல்லை. மாறாக, அத்தகைய போராட்டங்களுக்கு நீதித்துறை மூலம் - நீதிமன்றங்கள் மூலம் - தடைவிதிக்கும் அநியாய அடக்குமுறைக் கட்டுப்பாட்டைத்தான் பௌத்த - சிங்கள ஆட்சிப் பீடம் முன்னெடுக்கின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு இத்தனை ஆண்டுகளின் பின்னரும் நீதி கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் உறவுகள் கூடிக் குரல் கொடுத்தால், அதனால், இனங்களுக்கு இடையில் பதற்றம் ஏற்பட்டு விடும் என்று பொலிஸ் கயிறு விடுகின்றது. அந்தக் கயிறை விழுங்கி, அத்தகைய போராட்டங்களுக்கு இலங்கை நீதித்துறை தடை விதிக்கின்றது.

இதுதான் இலங்கையின் நீதித்துறையின் சீத்துவம்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக பக்கச் சார்பற்ற விசாரணைக்கு இலங்கை நீதித்துறையில் நம்பிக்கை இல்லை என்று கூறி, சர்வதேச நீதிப் பொறிமுறையே அவசியம் என்று தமிழர் தரப்பு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. அதை நியாயப்படுத்துவது போல வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தில், அப்படி வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் முன்னெடுக்கவிருந்த போராட்டத்திற்குத் தடைவிதித்த, திருகோணமலை நீதிமன்றஉத்தரவுஅமைந்திருப்பதுகவனிக்கத்தக்கது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்பட்டு, வல்வந்தமாக காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் பிரதான குற்றச்சாட்டு இலங்கை படைத்தரப்பு மீதே நீளுகின்றது.

தமிழர் தேசத்தை இரும்புச் சட்டக முற்றுகைக்குள் மூடி வைத்துக் கொண்டு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உட்பட தொண்டர் அமைப்புக்கள், ஊடக முகவர் நிறுவனங்கள், தொலைத் தொடர்புகள், சர்வதேச தொடர்பாடல்கள் எல்லாவற்றையும் அகற்றிவிட்டு, தமிழர் தேசத்தை வெளியுலகத் தொடர்பின்றி, ஒரு முற்றுகை இருட்டுக்குள் வைத்துக் கொண்டு, கொடூர யுத்தத்தைக் குரூரமாகத் தொடுத்த பௌத்த - சிங்களப் பேரினவாத அரசு, பல்லாயிரம் தமிழர்களைக் கொன்றொழித்தது என்பது சரித்திரம்.

அது தொடர்பாக நீதி, நேர்மையான விசாரணை ஒன்று நடத்தப்படுமானால் இலங்கையின் அரச பயங்கரவாதம் சர்வதேசமெங்கும் ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட்டு அம்பலமாகிவிடும் என அஞ்சுகின்றது சிங்களம்.

படையினருக்கு எதிராக எந்த விசாரணையும் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி தேர்தலின் பிரதான வேட்பாளர்கள் முக்கியத்துவம் கொடுத்தும் அறிவிக்கும் அளவுக்கு இவ்விடயத்தில் குற்றம் இழைத்தோரைப் பாதுகாப்பது பயங்கரவாதம் புரிந்த அரசுக் கட்டமைப்பின் மாறாத அரசியல் ரீதியான சித்தாந்தம் என்பது இப்போது வெளிப்படையாகவும் உறுதியாகவும் தெளிவாகி உள்ளது.

அத்தகைய சிங்களத்திடமிருந்து வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் நீதி கிடைக்கும் என்று நம்புவது அர்த்தமற்றது.




# கிண்ணியாவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(நிஷா)

கிண்ணியா வலய கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட கிண்ணியா வேப்பந்தவனை சாகிரா வித்யாலயத்தில் ஆசிரியர் ஒருவரை இனந்தெரியாதோர் தாக்கியதாக் கூறி மாணவர்களால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஆசிரியரைத் தாக்கிய சம்பவம் இன்று காலை 8:30 மணி அளவில் இடம்பெற்றது. வகுப்பறைக்குள் நுழைந்து ஆசிரியரை தாக்கியுள்ளனர்.

இதனால் மாணவர்கள் கலவரம் அடைந்து ஆசிரியரை தாக்கியவரைக் கண்டிக்க வேண்டும் எனக் கூறியே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவனை கண்டித்தமைக்காக மாணவரின் உறவினர் ஒருவர் குறிப்பிட்ட ஆசிரியருக்கு பதிலாக வேறு ஒரு ஆசிரியரை பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து தாக்கியுள்ளார். இதன் காரணமாக வகுப்பறை மாணவர்கள் அச்சமடைந்து வகுப்பறையை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து இந்த விடயத்தைக் கண்டித்து மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக உரிய நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாடசாலை சமூகத்தினரும் பெற்றார்களும் எதிர்பார்க்கின்றனர்.

இந்த விடயத்தை அறிந்த வலயக் கல்வி பணிப்பாளர் அந்த இடத்துக்கு விஜயம் செய்து பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடினார்.

# தாய்ப்பாலுட்டலின் அணுகுமுறைகள் உத்திகள் தொடர்பில் கருத்தரங்கு







(வி.ரி.சகாதேவராஜா)

தாய்ப்பாலுட்டலின் புதிய அணுமுறைகள் மற்றும் புதிய உத்திகள் பற்றிய கருத்தரங்கு மட்டக்களப்பில் நடைபெற்றது.

தாய்ப்பாலுட்டல் மாதமான ஓகஸ்ட் மாத செயற்பாடுகளில் ஒன்றாக, மட்டக்களப்பு பிராந்திய வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பணியாற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான விசேட கருத்தரங்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் அமைந்துள்ள டாக்டர் சதுர்முகம் மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளிதரனின் வழிகாட்டுதலில், தாய் சேய் நலப்பிரிவின் பிராந்திய வைத்தி அதிகாரி டாக்டர் கே. கிரிசுதன் ஒருங்கிணைத்திருந்த இந்தக் கருத்தரங்கில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் குழந்தைகளுக்கான மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் ஆர். மதன் வளவாளராக கலந்து கொண்டார்.

பாலுட்டலின் முக்கியத்துவமும் அதனை ஊக்குவிப்பதற்கான அணுமுறைகள் மற்றும் அதற்கான தற்போதைய காலத்தில் அறிமுகப்படுத்தபட வேண்டிய புதிய உத்திகள் மற்றும் தகவல்களை தெளிவூட்டும் அடிப்படையில் இக் கருந்தரங்கு இடம் பெற்றிருந்தது.

குழந்தைகளின் ஆரோக்கியத்துக்காக தாய்ப்பால் கொடுப்பதன் மதிப்பை ஊக்குவிக்கும் நோகோடு, யுனைடெட் ஸ்டேட்ஸ் தாய்ப் பாலூட்டும் கூட்டணி ஓகஸ்ட் மாதத்தை 2011 ஆம் ஆண்டு அறிவித்து தொடர்ந்து அனுஷ்டித்து வருவது குறிப்பிடத்தக்கது.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# தொழில் முயற்சியாளருக்கான கலந்துரையாடல் மட்டக்களப்பில்



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் வியாபார மற்றும் தொழில் வலையமைப்புக்களுக்கான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக, கைத்தொழில், விவசாய சம்மேளனத்தின் தலைவர் வீ.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை (30) இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக, கைத்தொழில் மற்றும் விவசாய சம்மேளனத்துடன் இணைந்து அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களுக்கு சிறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கான திறந்த கலந்துரையாடலாக இது அமைந்திருந்தது.

இந்த நிகழ்வில் சர்வதேச வளவாளராக பேராசிரியர் கணேசராஜா கலந்து கொண்டு தொழில் அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்கினார்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களை பெறுமதிசேர் பொருள்களாக மாற்றி விற்பனை மேற்கொள்ளுதல் மற்றும் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான திறந்த அனுபவப் பகிர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தது.

இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் வைத்தியர் கே. அருளானந்தம், பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், துறை சார்ந்த திணைக்களங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்ட உற்பத்தியாளர் சங்கம், மட்டக்களப்பு சுயதொழில் முனைவோர் மேம்பாட்டுக் கூட்டமைப்பு, மட்டக்களப்பு மாவட்ட ஆலோசனை சபையின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# களுவாஞ்சிகுடி விபத்து ஒருவர் உயிரிழப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை, மட்டக்களப்பு பிரதான வீதியில், களுவாஞ்சி குடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளிக்கிழமை (30) அதிகாலை 5 மணியளவில், முன்னால் சென்ற சைக்கிளை சொகுசு பஸ் பின்னால் வந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில், சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சி குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா கன்னிச் சொற்சமரில் சாதித்தது!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம். ஶ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையில் திருகோணமலையில் இடம்பெற்ற சொற்சமர் போட்டியில் சிவானந்தா சாதனையை நிலைநாட்டியுள்ளது.

தற்போதய கையடக்க தொலைபேசி பாவனை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் எனும் மகுடத்தில் வாதிட்ட மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி மாணவர் அணி வெற்றி பெற்று முதலாவது வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

ஒவ்வொரு வருடமும் நடைபெறவுள்ள இந்த சொற்சமர் நிகழ்வில் தொடர்ச்சியாக மூன்று முறை தொடர்ச்சியாக வெற்றி பெறும் கல்லூரிக்கு இந்த சவால் கிண்ணம் சொந்தமாகும்.

இந்நிகழ்வில் வெற்றியீட்டிய சிவானந்தா அணிக்கு திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரி அதிபர் எஸ்.கணேசலிங்கம் மற்றும் மட்டக்களப்பு , கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி அதிபர் எஸ்.தயாபரன் ஆகியோர் இணைந்து இந்த கிண்ணத்தை வழங்கி வைத்தனர்.

சொற்சமர் போட்டியில் சிவானந்தா தேசிய கல்லூரி மாணவர்களான ஏகலைவன் அட்சரன், பிறேமகுமார் அகிலேஸ், மதியழகன் சதுசன் மற்றும் ஜோஜ்குமார் யோவு ஆகியோர் மிகத்திறமையாக வாதத் திறமைகளை வெளிக்காட்டி இவ்வருடத்துக்கான வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர்.

திருமதி கஜேந்தினி பத்மநாதன் சேவியரின் நெறியாள்கையில் இந்த மாணவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இலவச முன்னோடி வினாத்தாள்கள்

(மாளிகைக்காடு)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்கில் பொக்கிசம் அமையத்தின் இலவச கல்வித் திட்டத்தின் கீழ் இலவச மாதிரி முன்னோடி வினாத் தாள்கள் கல்முனை கல்வி வலய காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை கல்வி கோட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை கல்வி வலயத்தில் உள்ள கல்முனை, சாய்ந்த மருது, காரைதீவு, மாளிகைக்காடு, பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு புலமைப்பரிசில் இலவச மாதிரி முன்னோடி வினாத்தாள் பொதிகளை பொக்கிசம் அமையத்தின் கல்முனை ஒருங்கிணைப்பாளர் எம்.என். எம்.அப்ராஸ் மற்றும் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் நூருல் ஹுதா உமர் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை (29) மற்றும் வெள்ளிக்கிழமை(30) களில் பாடசாலை அதிபர்களிடம் வழங்கினர்.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# “வீடற்றவர்களுக்கு வீடு” எனும் திட்டத்தில் இராணுவத்தினர் வீடு அமைத்து வழங்கல்







(அஸ்ஹர் இப்றாஹிம்)

55 படைப்பிரிவின் இராணுவ வீரர்களின் நிதிப்பங்களிப்பில் “வீடற்றவர்களுக்கு வீடு” எனும் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை கிராம சேவகர் பிரிவில் வறிய குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தின் நிதியில் இருந்து 12 லட்சம் மதிப்புள்ள நிரந்தரமான வீடு ஒன்று அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தளபதி விக்கும் லியனகேயால் வீட்டு உரிமையாளரிடம் இது கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் முரளிதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன், கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# உலக சாதனை புத்தக வெளியீடு பம்பலப்பிட்டி புதிய கதிரேசனில்





கவிமலர்கள் பைந்தமிழ்ச்சங்கம் இலங்கையில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடத்திய உலக சாதனை புத்தக வெளியீட்டு நிகழ்வில் கிழக்கு மாகாணம், அட்டாளைச் சேனையைச் சேர்ந்த இளம் இலக்கிய தம்பதிகளான கவிஞரும் ஊடகவியலாளருமான எஸ். என். எஸ். றிஸ்லி சம்சாட் மற்றும் இலக்கியச் செயற்பாட்டாளரும் விமர்சகருமான கே.எல்.நப்லா ஆகியோர் தங்களின் உலக சாதனை சான்றிதழ் மற்றும் விருதை பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளில் ஒருவரான திட்ட அபிவிருத்தி அமைச்சர் செய்யித் அலி ஸாஹிர் மௌலானாவிடம் இருந்து இதனைப் பெற்றுக்கொண்டனர்.

இந் நிகழ்வில் எஸ்.என்.எஸ்.றிஸ்லி சம்சாட்டின் “என்றென்றும் நீதான்” என்ற கவிதை நூலும் “என் நேசித்தலில் ” எனும் தலைப்பில் அமைந்த கவிதையுடனான தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டன.

மேலும் கே. எல். நப்லாவின் “கவிதை என்றொரு சொல்”, “ வரிகளில் நழுவும் கடல்” என்ற இரு நூல்களும் நிகழ்வில் வெளியிடப்பட்டன.

நூறு புத்தகங்கள் மற்றும் நூறு கவிதைகள் அடங்கிய தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டு உலக சாதனை நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை, இந்தியா உட்பட நாடுகள் முழுவதும் உள்ள நூற்றுக்கும் அதிகமான படைப்பாளிகள் பங்குபற்றிய இந்த நிகழ்வில் இலங்கை, இந்தியக் கலைஞர்களால் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றம் பெற்றமை நிகழ்வை மேலும் மெருகேற்றியது.

இதில் பங்குபற்றிய அனைத்துக் கலைஞர்களுக்கும் உலக சாதனைக்கான சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக செய்யித் அலி ஸஹிர் மௌலானா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக இலங்கை கதிரேசன் கோயில் பிரம்மஸ்ரீ நாகராஜ குருக்கள் , அறங்காவலர் எஸ். ராஜேந்திரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக இந்தியாவின் முனைவர் எஸ். யாசின் ஷரீப், சென்னை தென் மாவட்ட பிரதிநிதி தி.மு.க முனைவர் ஈகை கா. கருணாநிதி, கவிஞர். வீரை மைதீன் ஆகியோருடன் கவிமலர்கள் பைந்தமிழ்ச்சங்க நிர்வாகி ரித்துசூர்யாவும் கலந்து கொண்டனர்.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை இளைஞர் எழுச்சி மாநாடு






**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர்களின் எழுச்சி மாநாடு சாய்ந்தமருது பௌஸி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும்,மயோன் கல்வி அபிவிருத்தி அமைப்பின் தவிசாளருமான ரிஸ்லி முஸ்தபா தலைமையில் இடம்பெற்ற மேற்படி இளைஞர் மாநாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.அமீர் அலி, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ,இளைஞர் அமைப்பினர்,பெண்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். கலை,கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# காரைதீவு பிரதேச செயலகத்தில் யானைப் பாதுகாப்புக் கூட்டம்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

காரைதீவு பிரதேசத்தில் எதிர்வரும் நாள்களில் யானைத் தாக்கத்தால் பயிர்கள், சொத்துக்கள், உடமைகள் பாதிக்கப் படுவதை குறைத்தல் மற்றும் காயமேற்படல், உயிராபத்துக்கள் நிகழ்தலை தடுத்தல் தொடர்பான முன்னாயத்த செயற்பாடுகளை வெற்றிகரமானதாக முன்னெடுத்துச் செல்லல் தொடர்பில் பிரதேச மட்ட யானைப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி.ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலில், உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் தலைமையில், அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நடைபெற்ற கலந்துரையாடலில் நிர்வாக கிராம உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், வளத்தாப்பிட்டி வனஜீவராசிகள் அலுவலக உத்தியோகத்தர், காரைதீவு கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர், காரைதீவு விவசாய போதனாசிரியர் (மத்திய), நீர்ப்பாசன திணைக்கள கல்முனை பிராந்திய அலுவலக திட்டமிடல் உத்தியோகத்தர், சாய்ந்தமருது கமநல சேவைகள் மத்திய நிலைய உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மட்ட யானைப் பாதுகாப்பு தன்னார்வக் குழு அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழா திங்களன்று ஆரம்பமாகிறது

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி துன்னாலை அருள் மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை (02) காலை 9.15 மணிக்கு கொடியோற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

17 தினங்கள் நடைபெறும் மகோற்சவத்தின் முதலாம் திருவிழா தொடக்கம் 6 ஆம் திருவிழா வரை சுவாமி உள்வீதி வலம் வருவார். ஏழாம் திருவிழா தொடக்கம் சுவாமி வெளிவீதி உலா வருவார்.

சிறப்பு திருவிழாவாக 8 ஆம் திருவிழாவன்று குருக்கட்டு விநாயகர் தரிசனமும் 9 ஆம் திருவிழா வெண்ணெய்க் காப்பும் 10 ஆம் திருவிழா துகில் திருவிழாவும் 11 ஆம் திருவிழா பாம்புத் திருவிழாவும் 12 ஆம் திருவிழா ஹம்சன் போர்த் திருவிழாவும் 13 ஆம் திருவிழா வேட்டைத்திருவிழாவும் இடம்பெறும்.

14 ஆம் திருவிழா சப்பறத்திருவிழாவும் 15 ஆம் திருவிழா தேர்த்திருவிழாவும் 16 ஆம் திருவிழா சமுத்திரத் தீர்த்தமும் 17 ஆம் திருவிழா தீர்த்தமும் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடி இறக்கமும் நடைபெறும்.

வடக்கு வீதியில் சுவாமி வெளிவீதி உலாவரும் போது கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி அந்நாள் உற்சவக் கருத்தை சித்தரிக்கும் முறையில் இடம்பெறும். மஹோற்சத்தை முன்னிட்டுப் பருத்தித்துறை, யாழ்ப்பாண ஆகிய இடங்களில் இருந்து விசேட போக்குவரத்துக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தினமும் அன்னதானம் சுற்றாடலில் உள்ள மடங்களில் வழங்கப்படும்.

இந்துக்கள் கலாச்சார கோட்பாடுகளுக்கும் கலாச்சாரத்துக்கு அமைவாக உடைகள் அணிந்து பெறுமதி மிக்க தங்கத்திலான ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து உற்சவங்களில் கலந்து கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபை கேட்டுள்ளது.

# ஓய்வு பெற்ற ஆசிரியருக்குக் கௌரவம்





(எம். எப். றிபாஸ்)

அம்பாறை மாவட்டம் அக்கறைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை அல் அர்ஹம் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி ஓய்வு பெறும் ஏ.எல். எஹியாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ஏ.எம். எம்.இத்ரீஸ் தலைமையில் நடைபெற்றது.

“விடைபெறும் வித்தகர் சேவை நலன் பாராட்டு விழா” எனும் தொனிப் பொருளில் பாடசாலையின் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரிய ஆலோசகர் எம்.ஐ.சப்ரி, ஓய்வு பெற்ற அதிபர் கே.எல்.ஏ.சமது, அதிபர்களான எஸ். எம்.சாஹிர் ஹுசைன்,எம். எச்.எம.உவைஸ்,ஏனைய பாடசாலைகளின் அதிபர்களான எம். ஏ.சீ.அன்சார், ஓ.எல்.எம். றிஸ்வான், ஏ.ஜீ.ஏ.சமூர்,எம்.எம். அஹ்சாத்,எஸ்.எம்.றகீம், எம். எச். றஸாம் ஏ.ஆர்.ஜப்ராஸ்,ஏ.அஸ்மி,எம்.எஸ்.பாஹிம் ஆகியோர் உட்பட ஆசிரியர்கள்,கல்விசாரா ஊழியர்கள்,பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் சேவையில் சுமார் 32 வருடங்களாகச் சேவையாற்றிய எஹியா ஆசிரியருக்கும், அவரது துணைவியாருக்கும் கலந்து கொண்டனர். அதிதிகளால் பொன்னாடை போத்தி, நினைவு சின்னங்களும், பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



# அம்பிளாந்துறை கலைமகள் அணிகள் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய 20 வயது மற்றும் 17 வயது பெண்கள் கால்பந்தாட்ட அணிகள் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன.

கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணி முதலாமிடத்தைப் பெற்றுச் சம்பியனானது.

17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

20 வயதுக்கு உட்பட்ட மற்றும் 17 வயதுக்கு உட்பட்ட இரு அணிகளும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமேல் மாகாண எறிபந்துப் போட்டி கிராமப்புற பாடசாலைகள் பிரகாசிப்பு










(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் எறிபந்து சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த வடமேல் மாகாண பாடசாலைக்கு இடையிலான எறிபந்து போட்டிகளில் பல பாடசாலை மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆண்களுக்கான எறிபந்து போட்டியில் அம்பன்பொல விஷ்வ தீபன் தேசிய பாடசாலை சம்பியனாகவும், கிரியுல்ல விக்ரமசீலா தேசிய பாடசாலை இரண்டாம் இடத்தையும் பெண்களுக்கான எறிபந்து போட்டியில் போகமுவ மத்திய மகா வித்தியாலயம் சம்பியன்களாகவும், அம்பன்பொல விஷ்வ தீபன் தேசிய பாடசாலை இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.




# 'இளைஞர்களுக்கு டிஜிட்டல் பாதைகள்' விழிப்புணர்வு நடைபவனி, வீதி நாடகம்!

(பழுவூரான்)

இளைஞர்களுக்கு டிஜிட்டல் பாதைகள் பற்றிய விழிப்புணர்வு நடை பவனியும் வீதி நாடக அரங்கேற்றமும் இன்று சனிக்கிழமை (31) மட்டக்களப்பு சித்தாண்டியில் இடம்பெற்றன.

உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு அரோமா சிறுவர் அபிவிருத்தி நிலையம் மற்றும் முறக்கொட்டாஞ்சேனை பரி. பவுல் ஆலயம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

“இளைஞர்களே டிஜிட்டல் பாதைகள் தொடர்பில் அறிந் திருங்கள்” எனும் தொனிப்பொருளில் முறக்கொட்டாஞ் சேனை – அரோமா சிறுவர் அபிவிருத்தி நிலையம் முன் ஆரம்பமான பேரணி சித்தாண்டி பிரதான வீதி வழியாகச் சென்று பொதுச் சந்தையை அடைந்து, அங்கிருந்து மீண்டும் சித்தாண்டிச் சந்தியை வந்தடைந்தது.

இதன் போது கையில் விழிப்புணர்வு பதாதைகளைப் பேரணியில் பங்கேற்றோர் ஏந்திச் சென்றனர்.

பேரணியைத் தொடர்ந்து சித்தாண்டிச் சந்தியில் விழிப்புணர்வு நாடகமும் ஆலய இளைஞர்களால் நிகழ்த்தப்பட்டது.

அரோமா சிறுவர் அபிவிருத்தி நிலைய முறக்கொட்டாஞ் சேனை பரி.பவுல் ஆலயத்தின் இயக்குனர் அருட்பணி நேசராஜா சபிலாஷ் , அதன் முகாமையாளர் பிரதீபா மரியஸ் டெனிஸ்லஸ், இளைஞர் பிரதேச மன்ற பிரதேச சம்மேளனத் தலைவர் இ.கிசோக் பிரசன்னா, புனித பவுலின் ஆலய மூப்பர் திருமதி யூட் ஹேமா, ஞான ஒளி விளையாட்டுக் கழகத் தலைவர் சி.பிரதீபன் உள்ளிட்டோருடன் தேவாலய இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வை த.அருள்நேசன் மற்றும் ஜே.ஷலோம்மீகா ஆகியோர் இணைந்து ஒருங்கிணைப்புச் செய்திருந்தனர்.







# வெளிவிவகார அமைச்சகத்துக்கு இலங்கை விடயத்தில் தோல்வி

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு

இலங்கையை அண்மித்த கடலில் இந்திய கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வெளியுறவு அமைச்சகம் தவறிவிட்டது என்று தமிழ்நாட்டின் காங்கிரஸ் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

காங்கிரஸின் தமிழக குழுத்தலைவர் செல்வப்பெருந்தகை இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

2014 ஆம் ஆண்டில், ஆட்சிக்கு வந்தபோது, கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என பாரதிய ஜனதா கட்சி, உறுதியளித்தது.

இருந்த போதிலும், இலங்கை கடற்படையினரின் நடுக்கடல் தாக்குதல்கள் மற்றும் கைதுகள் இன்றுவரை தொடர்வதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்த நிலையில், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் இருந்து கடலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் மத்திய வெளியுறவு அமைச்சகம் தோல்வி அடைந்துவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# தமிழகத்தில் இயங்கிவரும் நிறுவனங்களுடன் அமெரிக்காவில் முதல்வர் ஸ்டாலின் ஒப்பந்தம்

## தமிழிசை சவுந்தரராஜன் குற்றச்சாட்டு

அமெரிக்கா சென்றுள்ள முதல்வர் ஸ்டாலின், தமிழகத்தில் ஏற்கெனவே இயங்கி வரும் நிறுவனங்களுடன்தான் ஒப்பந்தம் செய்துள்ளார் என தமிழிசை சவுந்தரராஜன் குற்றம்சாட்டியுள்ளார்.

மூப்பனார் நினைவு தினத்தையொட்டி சென்னை தேனாம்பேட்டையில் உள்ள நினைவிடத்தில் பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"மூப்பனாரைப் போல நாகரிகமான அரசியலை ஜி.கே. வாசன் முன்னெடுத்து வருகிறார்.

பிரதமர் மோடி உலக நாடுகளுக்கெல்லாம் சென்று, இந்தியாவில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அமெரிக்காவில் முதல்வர் ஸ்டாலின் ஒப்பந்தம் செய்துள்ள நிறுவனங்கள் அனைத்தும் ஏற்கெனவேதமிழகத்தில் இயங்கிவரும் நிறுவனங்கள்தான். எதுவும் புதிய நிறுவனங்கள் கிடையாது. எனவே மக்களுக்கு அனைத்தையும் விவரமாக முதல்வர் சொல்ல வேண்டும்.

'சமக்ரா சிக்ஷா அபியான்' திட்டம் என்பது ஏற்கெனவே



இருக்கும் நமது கல்வித் திட்டத்தை மேம்படுத்துவதற்காக கூடுதலான திட்டம். அதற்கு கூடுதலான ஆசிரியர்களை நியமிப்பார்கள்.

ஆனால், தி.மு.க. அரசு, அந்ததிட்டத்தைப் பின்பற்றாமல், அதற்கான செலவை மட்டும் கேட்கிறது. இதைத்தான் மத்திய அரசு கேள்விகேட்கிறதே தவிர, வழக்கமாக வழங்கும் கல்விக்கான ஒதுக்கீட்டை அவர்கள் நிறுத்தவில்லை. அரசியல் காரணங்களுக்காக புதிய கல்விக் கொள்கையை ஏற்க மறுக்கிறார்கள்."– என்றார்.

# அமெரிக்கா செல்கின்றார் மோடி; 24 ஆயிரம் இந்தியர்கள் முன்பதிவு

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், ஐ.நா.வின் எதிர்காலம் பற்றிய உச்சிமாநாடு எதிர்வரும் செப்டம்பர் 22, 23 திகதிகளில் நடைபெற உள்ளது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி அமெரிக்கா செல்ல உள்ளார்.

இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ள அமெரிக்காவின் இந்திய – அமெரிக்க சமுதாய அமைப்பு (ஐ.ஏ.சி.யு) வெளியிட்ட அறிக்கையில்,

"புரோகிரஸ் டுகெதர்' என்ற நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க உள்ளார். இதில் அமெரிக்காவின் 42 மாகாணங்களில் வசிக்கும் இந்தியர்கள் பங்கேற்பார்கள் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

இதில் பங்கேற்க 24 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முன்பதிவு செய்துள்ளனர். இதில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம், ஜெயின், சீக்கியம் உள்ளிட்ட பல்வேறு மதங்கள் மற்றும் பல்வேறு மொழி பேசும் மக்கள் அடங்குவர். இதில் பல்வேறு



கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. வர்த்தகம், அறிவியல், பொழுதுபோக்கு, கலை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் பங்கேற்க உள்ளனர்."– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# பங்களாதேஷின் ஆட்சிமாற்ற வன்முறையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்

## இடைக்கால சுகாதார அமைச்சின் தலைவர் தகவல்

பங்களாதேஷில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களின் போது வெடித்த வன்முறையில் 1,000 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் என்று இடைக்கால சுகாதார அமைச்சின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது 1971 சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் வரலாற்றில் இரத்தக்களரி காலகட்டமாக அமைந்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



முன்னதாக, பொதுத்துறை வேலை ஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் போது வன்முறை வெடித்தது.

பின்னர் அது பிரதமர் சேக் ஹசீனாவுக்கு எதிரான கிளர்ச்சியாக தீவிரமடைந்தது. இதனையடுத்து அவர் ஒகஸ்ட் 5 அன்று பதவி விலகி இந்தியாவுக்கு தப்பிச் சென்றார்.

இந்த நிலையில், நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முஹம்மது யூனுஸ் தலைமையிலான ஒரு இடைக்கால அரசாங்கம் ஹசீனாவுக்கு பின்னர் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றது.

இந் தநிலையில் வன்முறைகளில் 1,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதோடு 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கண்பார்வை இழந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தலைவர் நூர்ஜஹான் பேகம் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளால் பலர் பார்வையற்றவர்களாக மாறியுள்ளனர், பலர் இரு கண்களிலும் பார்வையை இழந்துள்ளனர், பலருக்கு காலில் காயங்கள் ஏற்பட்டுள்ளன, அவர்களில் பலரது கால்களை துண்டிக்க வேண்டியிருந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# பிரித்தானியாவில் அதிகரிக்கும் சிறுவர்கள் மீதான கத்திக்குத்து

பிரித்தானியாவில் 13 வயது சிறுவன் கத்திக்குத்து தாக்குதலில் கொல்லப்பட்ட நிலையில் பொலிஸார் தீவிர விசாரணையை தொடங்கியுள்ளனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு Oldbury-வின் West Midlands சந்தை நகரத்தில் Lovett Avenue பகுதியில் உள்ள வீட்டிற்கு பொலிஸார் மாலை 4 மணியளவில் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மருத்துவ குழுவினர் தேவையான சிகிச்சை வழங்கியும் அந்தச் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

மேலும், புலனாய்வு அதிகாரிகள் குழு விசாரணையை நடத்தி வருவதாக வெஸ்ட் மிட்லேண்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து புலனாய்வு பிரிவு கண்காணிப்பாளர் ஷான் எட்வர்ட்ஸ், இந்த சம்பவத்திற்கு காரணமானவர்களை விரைவில் கைது செய்வதற்கான அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

# அமெரிக்கத் தயாரிப்பான எவ் -16 ரக போர் விமானத்தை வீழ்த்தியது ரஷ்யா





ரஷ்ய ஏவுகணை தாக்குதலில் அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட எவ்-16 ரக போர் விமானத்தை உக்ரைன் இழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த திங்கள் கிழமை ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே கடுமையான தாக்குதல் நடந்ததாக கூறப்படுகிறது.

இந்த தாக்குதலின் போது ரஷ்யாவின் பேட்ரியாட் விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு எப் -16 ரக போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியுள்ளது.

எவ் -16 ரக போர் விமானத்தை நேட்டோ படைகள் வாங்கிய நிலையில் அண்மையில் உக்ரைனுக்கு வழங்கியது. இந்த விமானம் உண்மையில் அமெரிக்காவால் தயாரிக்கப்படுகிறது.

இந்த நிலையில் திங்களன்று, ரஷ்யா நூறாயிரக்கணக்கான ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மீது தாக்குதல் நடத்தியது.

இதன்போது எவ்-16 ரக போர் விமானம் தரையில் விழுந்து நொறுங்கியதாக உக்ரைன் நாடாளுமன்ற உறுப்பினர் மரியானா பெசுகயா தெரிவித்தார். ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதலில் எவ்-16 போர் விமானம் விழுந்து நொருங்கியதை உக்ரைன் முதலில் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆனால், மூன்று ரஷ்ய க்ரூஸ் ஏவுகணைகள் மற்றும் ஒரு ட்ரோன் ஆகியவை தரையில் விழுவதற்கு முன்பு சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யாவின் கடுமையான ஏவுகணை தாக்குதலில் இருந்து உக்ரைனியர்களை விமானி ஒலேசி மீட்டதாக உக்ரைன் விமானப்படை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த தகவலை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அறிவித்துள்ளார்.

மேலும், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட எவ்-16 விமானங்கள் ரஷ்யாவின் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை எதிர்கொள்ள பயன்படுத்தப்பட்டதாக ஜெலன்ஸ்கி கூறினார்.

கடந்த ஆண்டு, நேட்டோ படைகள் சுமார் 65 எவ் -16 போர் விமானங்களை உக்ரைனுக்கு வழங்க முடிவு செய்தன.

எவ் -16 ரக போர் விமானங்கள் தவிர, பேட்ரியாட் மற்றும் நாசா ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளும் உக்ரைனிடம் உள்ளன. எவ -16 ரக போர் விமானம் விழுந்து நொருங்கியது. இது உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கு பின்னடைவாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.







# யாழ். சர்வதேச புத்தகத் திருவிழாவில் என்னைக் கவர்ந்த நூலக நிறுவனம்

புத்தகம் என்பது புதிய உலகைப் படைப்பதற்கு மிகச் சிறந்த ஆயுதம். புத்தகங்கள் நூலகத்தையும் வீட்டையும் அலங்கரிப்பவையல்ல. மாறாக மனிதனின் அறிவு வளர்ச்சியையும் அவனது புதுமையை நோக்கிய தேடல்களையும் அலங்கரிப்பவை .

இவ்வாறு மகிமை பொருந்திய புத்தகங்களைக் கொண்டாடும் முகமாக யாழ்ப்பாண வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் கடந்த 09 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெற்றன.

அதிவேகமாக வளர்ந்து வரும் தொழில் நுட்ப உலகில் நமது சமூகத்தில் வாசிப்புக் கலாசாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்கமை வாக, எமது சமூகத்தில் வாசிப்பை ஊக்குவித்தல், எழுத்தாளர்களை வெளிக்கொண்டு வருதல், எழுத்தாளர்கள் வாசகர்கள் சந்திப்புக்கான களம் ஒன்றை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களை முன்னிறுத்தி சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும், தேசிய அளவிலும், ஆர்வமும் பங்குக கொள்ள விருப்பமும் உள்ள புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒன்றிணை த்து இந்தப் புத்தகத் திருவிழா பிரமாண்டமாக நடைபெற்றது.

இந்தப் புத்தகத் திருவிழா பொருத்தமான இட அமைவு, பொருத்தமான காலம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு மிக நேர்த்தியாகத் திட்டமிடப்பட்டது. வரவேற்கத்தக்கது.

குறிப்பாக வெம்மையைத் தவிர்ப்பதற்கு வாவிக்கரை ஓரத்துக்கு அருகிலும், எல்லையில்லா பார்வையாளர்கள் எவ்விதமான இடையூறுமில்லாமல் கண்காட்சியை பார்வையிடக் கூடிய அளவுக்கு ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பார்வையாளர்கள் ஒரு வழியூடாக வந்து மறுவழியூடாகச் செல்லக் கூடிய போதிய இட வசதி காணப்பட்டது.

அதே போன்று பொருத்தமான காலத்தையும் விழாக்குழு கருத்தில் கொண்டடை மிகச் சிறப்பு. சுற்றுலாப் பயணிகள் மட்டுமல்லாமல் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஆவணி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்வது வழமை. அந்தக் காலத்தைக் கருத்தில் கொண்டு இந்தப் புத்தகத் திருவிழாவை ஒழுங்கு செ ய்தமையால் புத்தகப் பிரியர்களுக்கு ஒரு களமாக அமைந்திருந்தது. அத்தோடு நல்லூர் உற்சவகாலத்தில் இந்நிகழ்வை வைத்ததால் புலம்பெயர்ந்த பலரும் பங்குபற்ற வாய்ப்பாக அமைந்திருந்தது.

இந்தப் புத்தகத் திருவிழாவை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் தலைவர் கலாநிதி வாசுதேவன் இராசையா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக் சஷிகா டீ சில்வா மற்றும் ஈழத்து இருமொழி எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி புத்தகத் திருவிழாவைப் பார்வையிட்டார். இந்நிகழ்வு இடம்பெற்ற தினங்களில் அறிமுக நிகழ்வுகள், புத்தக வெளியீடுகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் சீராக அரங்கேற்றப்பட்டன. இதில் 20 இற்கு மேற்பட்ட காட்சிக் கூடங்கள் அமை க்கப்பட்டு இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறுபட்ட புத்தக விற்பனை நிறுவனங்ககளின் புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

இதில், இந்த யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழாவில் பல காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் என்னைக் கவர்ந்த காட்சிக் கூடமாக நூலக நிறுவனம் காணப்பட்டது. ஈழநாட்டு புத்தகங்களின் மையமான நூலக நிறுவனமும் பங்கு கொண்டு அவர்களின் ஆவணமாக்கல் முயற்சிகளை சமூகத்துக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் மும்முரமாக ஈடுபட்டதை என்னால் காணக் கூடியதாக இருந்தது.

இந்த நிகழ்வில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த விழாக்குழு ஒழுங்கமைப்பாளர்களுக்கு முதற்கண் நன்றிகளை த் தெ ரிவித்துக் கொள்கின்றேன். காரணம் நூலக நிறுவனத்தின் பணி உண்மையிலேயே அளப்பெரியது. நூலக நிறுவனத்தை ப் பற்றி அறிந்திருந்தாலும் அது மேற்கெ ாள்ளும் ஆழமான ஆவணப்படுத்தல் பணியை அறிந்து கொள்வதற்கு இப்புத்தகத் திருவிழா எனக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. புத்தகத் திருவிழாவில் யாழ்ப்பாணம், கொழும்பு, வவுனியா, முல்லை த்தீவு, குருநாகல், புத்தளம் என இலங்கை மட்டுமன்றி பிரான்ஸ்,

தொடர்ச்சி▼




# யாழ். சர்வதேச புத்தகத் திருவிழாவில் என்னைக் கவர்ந்த நூலக நிறுவனம்

தொடர்ச்சி▲

கனடா, நோர்வே என சர்வதே ச ரீதியிலான நாடுகளிலிருந்தும் பாடசாலை மாணவர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், வாசகர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பெருமளவிலாகேனார் கலந்து கொண்டனர்.

குறிப்பாக நூலக நிறுவனத்தின் காட்சியறையில் 1900 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இதழ்கள், நூல்கள், பத்திரிகைகள் போன்ற சில அரிய ஆவணங்கள் மற்றும் பழைமையான ஓலைச்சுவடிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த உதயன், ஈழநாடு, ஈழநாதம், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகள், ஞானம், கலைச் செல்வி, விவேகம், ஜவநதி, விளக்கு, மல்லிகை , அறிவுக் களஞ்சியம் போன்ற சஞ்சிகைகளின் முதற் பிரதிகள் பற்றியும் கேட்டறிந்து கொள்ள முடிந்தது.

புத்தகத் திருவிழாவில் நூலக நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள், குறிப்பாக கடந்த காலங்களில் நூலக நிறுவனத்தினால் மே ற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், தற்போது மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் தொடர்பான தெ ளிவுபடுத்தலை இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் நூலகப் பணியாளர்கள் வழங்கினார்கள். அது தொடர்பான குறிப்புக்களையும் என்னால் எடுக்க முடிந்தது.

நூலக நிறுவன காட்சியறையை நேரடியாகப் பார்வையிட வந்திருந்தோரில் அதிகமானோருக்கு நூலக நிறுவனம் மற்றும் அதன் வலைத்தளம் பற்றி ஏற்கனவே தெரிந்திருக்கின்றது என்பதை அவர்களின் பின்னூட்டல் புத்தகத்தைப் பார்த்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இச்செய்தி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளித்தது.

நூலக நிறுவனத்தின் காட்சியறைக்கு வருகை தந்த பெருமளவானோர் நூலக வலைத் தளங்களைப் பயன்படுத்தியே தேவையான ஆவணங்களைத் தரவிறக்கம் செய்து கல்வி மற்றும் ஆய்வுத் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றார்கள். பின்னூட்டல் புத்தகத்தில் “வாசிப்புக்கும் தேடலுக்கு சிறந்த தளமாக இன்றைய தமிழ் உலகில் உலாவிக் கொண்டிருக்கும் சிறந்ததோர் தளம் நூலகம் வலைத் தளமாகும்” என்ற பின்னூட்டல் என்னை மிகவும் கவர்ந்தது.

நூலக நிறுவன காட்சியறைக்கு வருகை தந்த எனக்கு “ஈழத்து ஓலை ச்சுவடிகள் நூலகம்” செயற்றிட்டம் சார் தெளிவுப்படுத்தல் மிகவும் பிடித்திருந்தது. ஓலைச் சுவடிகள் தொடர்பான முழுமையான விடயங்களையும் ஈழத்து ஓலைச் சுவடிகள் நூலக செயற்றிட்டத்தின் அனை த்து செயற்பாடுகளையும் மிக அருமையாகத் தெளிவுபடுத்தினர்.

யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழாவில் பங்குபற்றிய நூலக நிறுவனத்துக்குப் பல விதமான அனுகூலங்கள் கிடத்தன என்பதை நிறுவனப் பணியாளர்களுக்கு ஊடாக அறிய முடிந்தது.

நான் அறிந்தவரையில் சில எழுத்தாளர்கள் அல்லது பதிப்பாளர்கள் தங்களது நூல்களை ஆவணப்படுத்திப் பாதுகாப்பதற்காக நூலக நிறுவனத்தை தொடர்பு கொண்டதை நேரடியாக பார்த்தேன். புத்தகத் திருவிழாவில் பங்கு கொள்ளத் தவறிய ஏனைய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் நூலக நிறுவனத்துடன் இணைந்து தமது நூல்கள் மட்டுமல்லாது ஈழத்து தமிழர்சார் அம்சங்களை ஆவணப்படுத்த விரும்புபவர்களும் நூலகச் செயற்பாடுகளில் தன்னார்வலர்களாக இணைந்து கொள்ள விரும்புவோரும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திலும் மட்டக்களப்பு அரசடியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்திலும் நே ரடியாகச் சென்று தொடர்பு கொள்ளலாம். அல்லது 94212231292 அல்லது 94761625485 எனும் தொலைபேசி எண்களிலும், noslahamfoundation@gmail.com எனும் மின்னஞ்சல் வழியாகவும் தொடர்பு கொள்ள முடியும்.

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலக நிறுவனத்தின் வலைத்தளத்தை யாரும், எரித்துவிடவோ அழித்துவிடவோ முடியாது என்பதால் காலா காலத்துக்கும் இது பாதுகாப்போடு இருந்து தொடர்ச்சியாக உலக வாழ் அனைவருக்கும் பயனளித்துக் கொண்டிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை .

இப்புத்தகக் கண்காட்சி எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் என்ற செய்தி என்னை மகிழ்வூட்டியது. எதிர்வரும் காலங்களில் ஒழுங்கு செய்யப்படவுள்ள புத்தகத் திருவிழாவைக் கலை நிகழ்வுகளைக் குறைத்து நூல்கள் சார்ந்த விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்துக் குறிப்பாக அதிக நூல் வெளியீடுகளைச் செய்தல், நூல் விமர்சனங்கள், நூல் திறனாய்வுகள், எழுத்தாளர்கள் அறிமுகம், வாசிப்பு அல்லது நூல்களை மை யப்படுத்திய பாடசாலை மட்டங்களுக்கிடை யிலான வினா விடை போட்டிகளை நடத்திக் கௌரவித்தல், பாடசாலை மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்வதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கமை த்துக் கொடுத்தல் போன்றவற்றை கவனத்தில் கொள்வது சிறந்தது.

**ப. ஜோன் டிலக்ஷன்,**
**தமிழ் ஆர்வலர்.**

கனடா முரசு
பக்கங்கள் 08
சனிக்கிழமை 31/08/2024

## மோ. சைக்கிள் விபத்தில் 82 வயது முதியவர் பலி!

கனடாவின் மிஸிஸாகா பகுதியில் 401 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 82 வயதான முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

02▶



# துப்பாக்கி வன்முறைகளுடன் தொடர்பு; 48 சந்தேக நபர் ரொறன்ரோவில் கைது!

## பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

**ரொறன்ரோவில் துப்பாக்கி வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**இரு வேறு விசாரணைகளின் அடிப்படையில் இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் ரொறன்ரோ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

**சந்தேக நபர்களுக்கு எதிராக 46 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.**

சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 24 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ பொலிஸின் 43 ஆம் பிரிவில் கடந்த ஜனவரி மாதம் முத லாம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மட்டும் ஏழு துப்பாக்கி வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

14 வயது முதல் 55 வயது வரையிலான சந்தேக நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் இவர்களுக்கு எதிராக பல்வேறு விதமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






# நோயாளிகளைத் துஷ்பிரயோகம் செய்தாராம் மருத்துவருக்கு பன்னிரண்டு ஆண்டுகள் சிறை

கனடாவின் மானிட்டோபா பகுதியில் நோயாளிகளை துஷ்பிரயோகம் செய்த மருத்துவருக்கு 12 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மானிடோபாவில் சில ஆண்டு காலமாகவே இந்த மருத்துவர் நோயாளிகளைத் துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்செல் பிசனொட்டே என்ற அரச மருத்துவரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.

நீதிவான் செயிட் பொன்ட்டினால் இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றிய போது நோயாளிகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

ஐந்து பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதன் காரணமாக டாக்டர் பிசனொட்டியின் மருத்துவ அனுமதி பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸாரின் வாகனத்தில் மோதுண்டு பாதசாரி பலி!

கனடாவின் சஸ்கட்ச்வான் ஃபல்லோ நெறொவ்ஸ் பகுதியில் பொலிஸ் வாகனத்தில் மோதுண்டு பாதசாரியான 31 வயதான நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முறைப்பாடு ஒன்றை விசாரிப்பதற்காக பயணித்த வாகனத்தில் இந்த நபர் மோதுண்டுள்ளார்.

உயிர் இழந்தவர் தொடர்பில் பொலிஸார் அவரது குடும்பத்திற்கு அறிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




## மோ. சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றாரியோவின் கோட்டாயிஸ் பகுதிக்கு அருகாமையில் இந்த வீதி அமைந்தள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தனி ஒரு வாகனம் விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை. விபத்தில் படுகாயம் அடைந்த முதியவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





# பிரிட்டிஷ் கொலம்பியா இடைத்தேர்தலில் வலதுசாரி - இடதுசாரி நேரடிப் போட்டி!

பிரிட்டிஷ் கொலம்பியா, ஓகஸ்ட் 31

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வாக்காளர்கள் மாகாணத்தின் இடைத்தேர்தலில் வலது பக்கமா, இடது பக்கமா என்ற தெரிவிற்குள் விடப்பட்டுள்ளனர் என லிபரல் கட்சியின் முன்னாள் அமைச்சர் டெர்ரி லேக் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் கிறிஸ்டி கிளார்க்கின் மாகாண அமைச்சரவையில் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார அமைச்சராக இருந்த டெர்ரி லேக், தாம் புதிய ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவாக இருக்கின்றார் எனத் தெரிவித்துள்ளார்.

கன்சர்வேடிவ் கட்சியினர் சுற்றுச் சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளில் நடுநிலையை நோக்கி நகரவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பி.சி யுனைட்டட்டின் வேட்பாளர் போட்டியிலிருந்து விலகி, கன்சர் வேட்டிவ் வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாக அறிவித்த பின்னரே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.



# மூன்று நாள்கள் அலுவலகத்தில் வேலை கட்டாயம் அரசின் உத்தரவை நீதிமன்றம் விசாரிக்க இணக்கம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 31

பொது ஊழியர்கள் வாரத்திற்கு மூன்று நாள்கள் அலுவலகத்திற்கு திரும்புவதைக் கட்டாயமாக்கும் மத்திய அரசின் முடிவை மறுபரிசீலனை செய்ய மத்திய நீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது.

செப்ரம்பர் 9 ஆம் திகதி தொடங்கும் இந்த உத்தரவு, தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத்தின் சீற்றத்திற்கு மத்தியில் மத்திய அரசால் மே மாதம் செய்யப்பட்டது.

கனடாவின் பொதுச் சேவைக் கூட்டமைப்பு தொடர்பில் தனது கவலைகளை பெடரல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றது.

இது குறித்து தீர்ப்பினை வெளியிட்ட நீதிமன்றம் வழக்கை விசாரிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களை அலுவலகத்திற்குத் திருப்பி அனுப்பும் முடிவைச் சுற்றி வெளிப்படைத் தன்மையை எதிர்பார்க்கும் தொழிலாளர்களுக்கு விசாரணை ஒரு 'முக்கிய படி' என்று தொழிற்சங்கம் கூறுகிறது.



# மொன்றியலில் அமைக்கப்பட்டுள்ள குழைசைத் தங்குமிடத்தால் சர்ச்சை!

கியூபெக், ஓகஸ்ட் 31

மொன்றியலின் செயிண்ட்-ஹென்றி சுற்றுப்புறத்தில் உள்ள ஒரு தொடக்கப் பாடசாலையிலிருந்து சில காலடிகள் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு சர்ச்சைக்குரிய வீடற்ற தங்குமிடம், அந்த நகரம் முழுவதும் பல சமூகங்களில் சமூக ஒத்துழைப்பில் உள்ள சிக்கல்களை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

அங்கு தங்கியிருக்கும் மெய்சோன் பெனுவா லப்ரே அந்தப் பகுதிப் பெற்றோர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளின் கோபத்தை ஈர்த்துள்ளார்.

இந்த வசதியானது ஏப்ரலில் திறக்கப்பட்டதிலிருந்து அட்வோட்டர் சந்தை யிலிருந்து தெரு முழுவதும் அதிக போக்குவரத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட சுற்றுப்புறத்தின் தன்மைக்கு தீங்கு விளைவிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

அங்கு வெளிப்படையான போதைப் பொருள் பயன்பாடு, ஆக்ரோஷமான நடத்தை மற்றும் பாலியல் நடத்தை ஆகியவற்றை குழந்தைகள் அருகில் இருக்கும் நேரம் உட்பட வெளிப்படையான போதைப்பொருள் பயன்பாடு, ஆக்ரோஷமான நடத்தை மற்றும் பாலியல் நடத்தை ஆகியவற்றைக் கண்டனர் என நாள் பராமரிப்பு மையத்திற்கு அடிக்கடி வருபவர்கள் கூறுகிறார்கள்.

மையத்தின் பின்புற கதவு விக்டர் ஷரூஸலோட் தொடக்கப் பள்ளியால் பயன்படுத்தப்படும் பூங்காவின் எல்லையாக உள்ளது.

கடந்த வாரம், கியூபெக் அரசாங்கம், தங்குமிடத்தில் வழங்கப்படும் சில நாள் சேவைகளை 'மிகவும் பொருத்தமான இடத்திற்கு' மாற்றுவதற்கான மொன்றியலின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது.




# விலங்குகளைக் கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டு இளைஞர் ஒருவர் மீது!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 31

கிழக்கு முனை டொராண்டோ சுற்றுப்புறத்தில் விலங்குகளைக் கொடுமைப்படுத்தினார் என இளைஞர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 1 முதல் ஓகஸ்ட் 28 வரை, 16 வயது சிறுவன் ஒரு பூனை உட்பட பல உள்ளூர் விலங்குகளை காயப் படுத்தி கொன்றாப என றொறன்ரோ பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

மில்லி என்ற பூனை இறந்து கிடந்ததாகவும், வெளிப்படையாக மொட்டையடிக்கப்பட்டு, கொட்டகையின் அடியில் காணப்பட்டதாகவும், மற்றொன்றைக் காணவில்லை என்றும் ஐவர்டேல் குடியிருப்பாளர்கள் கூறியுள்ளனர். ஒரு ரக்கூன் இறந்து கிடந்ததையும் மற்றொன்று சித்திரவதை செய்யப் பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# பரா ஒலிம்பிக்ஸில் கனடாவுக்கு முதல் நாளில் இரு பதக்கங்கள்

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 31

2024 பெரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியின் முதலாவது நாளில் கனடா இரண்டு பதக்கங்களைக் கைப்பற்றியது.

போட்டியின் முதலாவது நாளான ஓகஸ்ட் 29ஆம் திகதி கனடிய அணி இரண்டு வெண்கலப் பதக்கங்களை வெற்றி பெற்றது.

சைக்கிள் ஓட்டத்தில் கேட் ஓ பிறய்ன் கனடாவின் முதலாவது பதக்கத்தை பெரிஸ பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் வென்றார்.

நீச்சல் போட்டியில் ஒரெல் ரிவார்ட் கனடாவின் முதலாவது பதக்கத்தை வென்றார்.

இவை இரண்டும் வெண்கலப் பதக்கங்களாகும். 2024 பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட் டியில் கனடிய அணியின் சார்பில் 125 விளையாட்டு வீரர்கள் போட்டியிடுகின்றனர்.





# போதைப் பொருளைக் கடத்த முயன்ற 2 கனடியர்கள் வான்கூவரில் சிக்கினர்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 31

சுமார் 25 கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருளை வான்கூவார் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக கடத்த முயற்சித்த இரு கனடியர்கள் கனடிய எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25 கிலோ கிராம் எடையினுடைய மெத்தப்பட்டமைன் என்ற போதை பொருளை இந்தக் கனடியர்கள் கடத்த முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட இந்த போதைப் பொருளின் சந்தை பெறுமதி 1.25 மில்லியன் டொலர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இரு வேறு சந்தர்ப்பங்களில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 27 ஆம் திகதி 10 கிலோ கிராம் எடையுடைய மெத்தபட்டமைன் போதைப் பொருளுடன் ஒரு கனடியப் பிரஜையை, அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்ட இந்தப் போதைப்பொருள் நாட்டுக்குள் கடத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஜூலை மாதம் 29 ஆம் திகதி சுமார் 15 கிலோ கிராம் எடையுடைய மெத்தப்பட்டமைன் போதைப் பொருளுடன் மற்றும் ஒரு கனடியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரும் பயண பொதிக்குள் மறைத்து வைத்து போதை பொருளை கடத்தி உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# கனடாவில் வெளிநாட்டு மாணவர்களை சில நிறுவனங்கள் ஏமாற்றுகின்றனவாம்

## பிரதிப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் கவலை

கனடாவில் வெளிநாட்டு மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் சில நிறுவனங்களினால் ஏமாற்றப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் சர்வதேச மாணவர் மற்றும் தற்காலிக வெளிநாட்டு பணியாளர் திட்டங்களில் மோசடிகள் இடம் பெற்று வருகின்றன எனவுன் குற்றம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடாவின் பிரதிப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கனடாவிற்கு வருகை தரும் குறைந்த ஊதியம் பெறும் தற்காலிக வெளிநாட்டு பணியாளர்களின் எண்ணிக்கையை வரையறுக்க திட்டமிட்டுள்ளதாக அண்மையில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்திருந்தார்.

இவ்வாறான ஒரு பின்னணியிலே வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை வரையறுக்க உள்ளதாக கனடிய மத்திய அரசாங்கம் அறிவித்திருந்தது.

வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு பணியாளர்கள் கனடாவிற்கு பல்வேறு வழிகளில் அதிகளவான பங்களிப்பினை வழங்குகின்றனர் என அமைச்சர் கிறிஸ்டியா தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த முறைமைகளில் சில துஷ்பிரயோகங்களும் இடம்பெற வாய்ப்பு உண்டு என அவர் தெரிவித்துள்ளார். சில நிறுவனங்களின் ஊடாக மோசடிகள் இடம் பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

சில நிறுவனங்கள் மாணவர்களை அழைத்து நல்ல கல்வி வழங்குவதில்லை எனவும் இந்த திட்டங்களை அந்த நிறுவனங்கள் துஷ்பிரயோகம் செய்கின்றன எனவும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.






# வங்கியின் பெயரில் நடந்த மோசடியில் சிக்கி 80 ஆயிரம் டொலர்களை இழந்த பெண்கள்!

கனடாவின் ரொறன்ரோவில் இரண்டு பெண்கள் வங்கி மோசடி காரணமாக சுமார் 80 ஆயிரம் டொலர்களை இழந்துள்ளனர்.

போலி தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்தி இந்த மோசடி இடம்பெறுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய மோசடி தவிர்ப்பு நிலையம் இந்த விடயம் தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வங்கி விசாரணையாளர்கள் என்ற போர்வையில் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்கி மோசடி விசாரணை பிரிவிலிருந்து அழைப்பு ஏற்படுத்துவதாக கூறி வாடிக்கையாளர்களின் தரவுகளை பெற்றுக் கொண்டு அவற்றைக் கொண்டு இவ்வாறான மோசடிகள் இடம் பெறுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

ஆர்.பி.சி. மற்றும் ஸ்கொட்டி வங்கிகளின் பெயர்களைப் பயன்படுத்தி இரண்டு பெண்கள் இவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளனர்.

ஸ்காட்டி வங்கியில் இருந்து பேசுகிறார்கள் என்ச்க் கூறி பெண் ஒருவரிடம் ஐம்பதாயிரம் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று ஆர்.பி.சி. வங்கியில் இருந்து பேசுகின்றார்கள் எனக் கூறி மற்றுமொரு பெண்ணிடமிருந்து 34 ஆயிரம் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது. தொலைபேசியில் வாடிக்கையா ளர்களின் ஓ.டி.பி. விவரங்கள் உள் ளிட்ட பல்வேறு தகவல்களை பெற் றுக் கொண்டு இந்த மோசடி மேற் கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வங்கியின் இலக்கத்திற்கு நிகரான இலக்கங்களை கொண்டு இந்த மோசடி இடம் பெறுவதாக மேலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே வாடிக்கையாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# டக் போர்ட் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஒன்றாரியோ மாகாண மக்கள் தொடர்ந்து ஆதரவு

ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்திற்கு மக்களின் ஆதரவு தொடர்ந்தும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பு மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தில் முற்போக்கு கன்சேர்வேட்டிவ் கட்சி ஆட்சி நடத்தி வருகின்றது.

முதல்வர் டக் போர்ட் மீதும் கட்சி மீதும் மக்களின் ஆதரவு தொடர்ந்தும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்காளர்கள் மத்தியில் போர்ட் தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவு நீடிப்பதாக லியாசியோன் ஸ்டேட்ஜிஸ் என்ற கருத்துக்கணிப்பு மூலம் தெரிய வந்துள்ளது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில் 40 வீதமான மக்கள் அரசாங்கத்தை ஆதரிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லிபரல் கட்சிக்கு 27 வீதமான ஆதரவும் என்.டி.பி காட்சிக்கு 21 வீத ஆதரவும், பசுமை கட்சிக்கு ஆறு வீத ஆதரவும் காணப்படுகின்றது.

இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பை விடவும் இம்முறையை டக் போர்ட் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சிக்கு இரண்டு வீத ஆதரவு அதிகரித்துள்ளது.





# 6 முறை ஆடை களையப்பட்டு சோதனை அதனால் தண்டனையைக் குறையுங்கள்!

## கொலை வழக்கில் இளம்பெண்ணின் சட்டத்தரணி கோரிக்கை

தன் கட்சிக்காரரான பதின்மவயதுப் பெண், ஆறு முறை அதிகாரிகளால் ஆடை களையப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டதால், அவரது தண்டனையைக் குறைக்கவேண்டும் என கனேடிய பெண்ணொருவரின் சட்டத்தரணி கோரிக்கை விடுத்துள்ளார்.

2022ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், பூங்கா ஒன்றில் படுத்திருந்த, வீடற்றவரான கென்னத் லீ (வயது59) என்னும் நபரை சூழ்ந்துகொண்டு சரமாரியாகத் தாக்கினார்கள் பதின்ம வயதுக் கூட்டப் பெண்கள்.

படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட லீ, டிசம்பர் மாதம் 18ஆம் திகதி உயிரிழந்துவிட்டார்.

அதைத் தொடர்ந்து, லீயைத் தாக்கிய, 13 முதல் 16 வயதுடைய எட்டு பெண்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இந்நிலையில், அந்த பெண்களில் ஒரு 13 வயதுப்பெண்ணை, அதிகாரிகள் ஆறு முறை கட்டாயப்படுத்தி ஆடை களைந்து நிர்வாணமாக்கி சோதனைக்குட்படுத்தியுள்ளார்கள்.

சிறார்கள் மற்றும் இளைஞர்கள் சேவை அமைச்சகக் கொள்கை, காவலில் அடைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் ஆடை களையப்பட்டு சோதனை செய்யப்படுவதை அனுமதித்தாலும், அவர்களை ஒருபோதும் முழுமையாக நிர்வாணப்படுத்தக் கூடாது என்று கூறுகிறது.



இந்நிலையில், நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சட்சியமளித்த சம்பந்தப்பட்ட இளம்பெண், தான் நிர்வாணமாக்கப்பட்டமையை இப்போதும் அவமானமாக உணர்கின்றார் எனத் தெரிவித்தார்.

அவர்கள் என்னை நடத்திய விதம், என்னைக் குறித்து நானே மோசமாக உணரும் நிலையை ஏற்படுத்திவிட்டது என்றும், மக்கள் தன்னைப் பார்க்கும்போது அசௌகரியமாக உணர்கிறார் எனவும் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, தனது கட்சிக்காரரான அந்தப் பெண் விதிகளை மீறி அவமதிக்கப்பட்டதாலும், அது அவரது மன நிலையை பாதித்துள்ளதாலும்,அவரதுதண்டனைக்காலத்தை குறைக்கவேண்டும் என அந்தப் பெண்ணின் சட்டத்தரணியான Jordana Goldlist என்பவர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.